**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051820

1. District மாவட்டம் : கடலூர் PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year ஆண்டு : 2021 FIR No. மு.த.அ. எண் : 04/2021 Date நாள் : 21.04.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் : 20.04.2021 12.00 hrs Date to நாள் வரை :
   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 21.04.2021 Time நேரம் : 0700 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Vol - I Time நேரம் : 0700 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : சுமார் 95 கி.மீ. மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி : A.E. ஆபீஸ், அடரி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : R.நல்லதம்பி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : ராமசாமி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : வயது 36 (d) Nationality நாட்டினம் : இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் : தையற் பள்ளி (g) Address : முகவரி : எண்.241, மேற்கு தெரு, கொளவாய் கிராமம், வேப்பூர் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   ரவி, A.E. ஆபீஸ், அடரி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 21.04.2021 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜர் செய்த கடலூர் மாவட்டம், வேப்பூர் தாலுக்கா, கொளவாய் கிராமம் நெ.241, மேற்கு தெருவைத் சேர்ந்த ராமசாமி மகன் R.நல்லதம்பி என்பவர், எழுத்து மூலமான புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : 21.04.21 அனுப்புனர் R.நல்லதம்பி, த/பெ ராமசாமி நெ.241, மேற்கு தெரு, கொளவாய் கிராமம், அசகளத்தூர் P.O., வேப்பூர் வட்டம், கடலூர் மாவட்டம். பெருநர் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். ஐயா:– நான் கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், கொளவாய் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் B.Sc. Maths

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Nallathambi

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21-4-2021 at 09.45 hrs.

Name: பெயர் தி. திருவேங்கடம்
Rank: நிலை ...................No. எண் 21/4/21
காவல் ஆய்வாளர்
ல.ஒ.த.பி பிரிவு
கடலூர்.

படித்துள்ளேன். நான் அடரியில் தையல் பயிற்சி நடத்தி வருகிறேன். என் மனைவி உத்ரா என்பவர் பெயரில் கொளவாய் கிராமத்தில் வீட்டு மனை உள்ளது. அந்த மனையில் இரண்டு கடைகள் கட்டியுள்ளேன். அதில் ஒரு கடையில் நான் மாவு அறைக்கும் இயந்திரம் வைத்து தொழில் நடத்த உத்தேசித்துள்ளேன். அதற்கு தேவையான மாவு அறைக்கும் இயந்திரத்தை வாங்கி பொறுத்தியுள்ளேன். அந்த கடைக்கு தேவையான மின்சார இணைப்பு பெறுவதற்காக online மூலம் 16.04.21 அன்று என் மனைவி பெயரில் நான் மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளேன். பின்னர் நான் நேற்று (20.04.21) மதியம் சுமார் 12 மணிக்கு நான் அடரியிலுள்ள A.E. ஆபிசுக்கு சென்றேன். அந்த ஆபீசில் பணியில் இருந்த ஒரு நபரிடம் நான் online–ல் விண்ணப்பித்த படிவத்தின் விவரம் கேட்டேன். அவர் என்னிடம் நான் இந்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்து அந்த கடைக்கு எஸ்டிமேட் தயார் செய்து மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டிய அதிகாரம் உள்ளவர் என்றும், அவர் பெயர் ரவி என்று சொன்னார். நான் அவரிடம் அறவை மெஷின் வாங்கி கடையில் பொறுத்திவிட்டேன். இந்த கொரானா காலத்தில் வேலை இல்லாமல் இருக்கிறேன், சீக்கிரம் இணைப்பு தருமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் இந்த வெழில் காலத்தில் உன் அவரசத்துக்கு கொடுக்க முடியாது, முதலில் transformer–ஐ செக்பன்னி லோடு பார்த்துதான் மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று சொன்னார். நான் அவரிடம், கஷ்டமா இருக்கு சீக்கிரம் ஏற்பாடு செய்யுமாறு கேட்டு கொண்டேன். அதற்கு அவர் என்னிடம் உடனே மின் இணைப்பு பெற கொஞ்சம் செலவாகும் உன்னால் கொடுக்க முடியுமா என்று கேட்டார். அவரிடம் நான் எவ்வளவு செலவாகும் என்று கேட்டேன். அவர் தன்னிடம் 5000 ஐந்து ஆயிரம் ரூபாய் கொடுக்குமாறு சொன்னார். அவரிடம் இப்பணம் மின் இணைப்பு கட்டவேண்டிய பணமா என்று கேட்டேன், அதற்கு அவர் மின் இணைப்புக்கு கட்டவேண்டிய பணம் தனியாக கவுண்டரில் கட்டவேண்டும். இந்த 5000 ரூபாய் ஆபீஸ் செலவுக்கு என்று சொன்னார்.

அ. [signature]
21/4/21

அதற்கு அவரிடம் நான் சரியென்று சொல்லிட்டு வீட்டுக்கு சென்றுவிட்டேன். நான் யோசித்து பார்த்ததில், லஞ்சம் கொடுத்து மின் இணைப்பு பெறுவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. மேலும், என் மனைவியிடம் மின் இணைப்பு கொடுப்பதற்கு 5000 ரூபாய் லஞ்சம் கேட்கராங்க என்று சொன்னதற்கு அவருக்கும் லஞ்சம் கொடுத்து மின் இணைப்பு பெற விருப்பமில்லை என சொன்னார். நாங்கள் மின் இணைப்பு கொடுப்பதற்கு 5000 ரூபாய் லஞ்சம் கேட்கும் ரவி என்பவருக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தோம். அதற்படி நான் இன்று தங்கள் அலுவலகம் வந்து புகார் மனு கொடுக்குறேன் அவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட ஐந்தாயிரத்தை கொண்டுவந்துள்ளேன். நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இப்படிக்கு (ஒப்பம்) R.Nallathambi. மேற்படி வாதி கொடுத்த புகார் மனுவின் மீது இன்று 21.04.2021ம் தேதி காலை 08.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2021, U/s 7 Prevention of Corruption (Amendment) Act, 2018- ன்படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர், இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

அ. திருவேங்கடம்
21/4/21

அ. திருவேங்கடம்
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு
கடலூர்.